tnkalvi.online

No. of Printed Pages : **7**

5125

பதிவு எண்
Register Number

பகுதி - III — சிறப்புத் தமிழ்
Part - III — ADVANCED LANGUAGE — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பாடுக என்றதும் பாடுவோன் :

(அ) சித்திரகவி (ஆ) மதுரகவி (இ) ஆசுகவி (ஈ) வித்தாரகவி

2. 'எழுத்து' கால புதுக்கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு :

(அ) புதுக்குரல்கள் (ஆ) பெட்டிக்கடை நாரணன்

(இ) காட்சி (ஈ) விஞ்ஞானி

3. வேதநாயகர் எழுதிய தமிழின் முதல் புதினம் :

(அ) பிரதாப முதலியார் சரித்திரம் (ஆ) சாசனம்

(இ) கோமகள் (ஈ) பிரசாதம்

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

4. 'ரென்கா' பாடல் மரபிலிருந்து தோன்றியது _____ கவிதை வடிவம்.

(அ) துளிப்பா - ஹைக்கூ

(ஆ) இயைபுக் குறும்பா - லிமெரிக்

(இ) இயைபுத்துளிப்பா - லிமெரைக்கூ

(ஈ) நகைப்பா - சென்ரியூ

5. ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒரு பொருளைப்பற்றி மட்டுமே அமையும் ஓர்மை கொண்டது.

(அ) புதினம் (ஆ) கவிதை (இ) கட்டுரை (ஈ) சிறுகதை

6. தொடக்ககாலத்தில் தமிழ் மரபில் கதைகள் _____ சொல்லப்பட்டன.

(அ) வாய்மொழியாக (ஆ) எழுத்து வழியாக

(இ) சைகை வழியாக (ஈ) அச்சுவழியாக

7. இவர்களில் யார் ஆண் எழுத்தாளர் இல்லை ?

(அ) அம்பை (ஆ) யூமாவாசுகி (இ) சுஜாதா (ஈ) பூமணி

8. பொருந்தாததைக் கண்டறிக.

(அ) மாணிக்கம் - தம்பிக்கு மூத்தவன்

(ஆ) பேபி குட்டி - பாட்டி

(இ) துரைசாமி - அப்பாவின் முதலாளி

(ஈ) சுந்தரி - அத்தை

9. சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் இந்திய அளவில் புகழ்பெற்றுத் திகழ்ந்த நாடகக் கலைஞர் _____.

(அ) சங்கரதாஸ் சுவாமிகள் (ஆ) பம்மல் சம்பந்தனார்

(இ) ஆர்.எஸ். மனோகர் (ஈ) மதுரகவி பாஸ்கரதாஸ்

10. 'பாலாமணி ஸ்பெசல்' என்று அழைக்கப்பட்டது.

(அ) புராண நாடகம் (ஆ) பெண்கள் நாடகம்

(இ) ஸ்பெசல் நாடகம் (ஈ) தொடர்வண்டி

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. பொருத்துக :

(1)	சங்கரதாஸ் சுவாமிகள்	(i)	நாடக அரசி
(2)	பம்மல் சம்பந்தனார்	(ii)	நாடக காவலர்
(3)	ஆர்.எஸ். மனோகர்	(iii)	தமிழ் நாடகத் தலைமையாசிரியர்
(4)	பாலாமணி	(iv)	தமிழ் நாடகத் தந்தை

(அ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

(ஆ) (1)-(iii), (2)-(ii), (3)-(iv), (4)-(i)

(இ) (1)-(ii), (2)-(i), (3)-(iii), (4)-(iv)

(ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

12. வீரசோழியம் என்ற இலக்கண நூலின் ஆசிரியர் ?

(அ) புத்தமித்திரர் (ஆ) வீரசோழர்

(இ) வீரமா முனிவர் (ஈ) குணவீரபண்டிதர்

13. பகை நாட்டின்மீது போர் தொடுத்தல் _____.

(அ) வஞ்சித் திணை (ஆ) வெட்சித் திணை

(இ) நொச்சித் திணை (ஈ) காஞ்சித் திணை

14. என் தந்தை தமிழாசிரியராகப் பணிபுரிந்தார் என்பது _____.

(அ) விழைவுத் தொடர் (ஆ) செய்தித் தொடர்

(இ) உணர்ச்சித் தொடர் (ஈ) வினாத் தொடர்

15. 'கலைச்செல்வி நேற்று வந்திலள்' என்பது _____.

(அ) உடன்பாட்டு வினை (ஆ) தன்வினை

(இ) எதிர்மறை வினை (ஈ) பிறவினை

16. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) தேசபக்தன் - விடுதலை வேட்கை

(ஆ) தில்லி ஸ்கெட்ச் புக் - கருத்துப்படம்

(இ) தினத்தந்தி - கடினநடை

(ஈ) விடுதலை - எழுத்துச் சீர்திருத்தம்

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

17. இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் அமைந்துள்ள இடம் :

(அ) சென்னை (ஆ) பெங்களூரு (இ) புதுதில்லி (ஈ) மும்பை

18. 'பேச்சுத் தமிழை கொச்சை நீக்கி, மக்களின் மொழியில் எழுத வேண்டும்' என்று கூறியவர் :

(அ) பாரதியார் (ஆ) டி.எஸ். சொக்கலிங்கம்

(இ) ஏ.என். சிவராமன் (ஈ) சி.பா. ஆதித்தனார்

19. **கூற்று :** எழுத்துருக்களைக் கணினியில் பயன்படுத்த வேண்டுமானால், அம்மொழியின் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வோர் எண்ம மதிப்பைக் கொடுக்க வேண்டும்.

காரணம் : கணினி 0, 1 ஆகிய இரும (Binary) எண்களைத்தான் புரிந்து கொள்ளும்.

(அ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி. ஆனால், **காரணம் கூற்றுக்கான** சரியான விளக்கமல்ல.

(ஆ) **கூற்று** சரி, **காரணம்** தவறு.

(இ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி. **காரணம், கூற்றுக்கான** சரியான விளக்கம் ஆகும்.

(ஈ) **காரணம், கூற்று** இரண்டும் தவறு.

20. குழந்தைகளுக்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தேடு பொறி _____.

(அ) பிங் (ஆ) லைகோஸ் (இ) கிடில் (ஈ) அலெக்ஸா

பகுதி - II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

21. கசட தபற இதழில் வெளியான கவிதைகளின் தன்மையை விளக்குக.

22. இரட்டை நாகபந்தம் என்றால் என்ன ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

23. இப்ப அவன் வாங்கின வசவுக்கு ஒரு காரணமும் கெடயாது.

''சுண்ணாம்பு எடுத்துட்டு வாலே
மாசாணம்'' ண்ணாரு.

- இதைப் பொதுமொழி நடையில் எழுதுக.

24. கதையின்மையம் – குறிப்பு வரைக.

25. சிறுகதையின் உயிராகக் கருதப்படுவது எது ?

26. முதல் தலைமுறை சிறுகதை ஆசிரியர்களாக அறியப்படுபவர்கள் யாவர் ?

27. குறிப்புமுரண் என்பது யாது ?

28. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்'

-இத்தொடர், இன்றைய நடைமுறை இலக்கணத்திற்குப் பொருந்தியிருப்-பதற்குச் சான்று தருக.

29. 'சின்னூல்' என்றழைக்கப்படும் நூல் எது ? ஏன் ?

30. சீரான வள இடங்காட்டி என்பது யாது ?

பகுதி - III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

31. புதுக்கவிதை வலிமை பெறுவதற்கு உதவிய இதழ்கள் யாவை ?

32. சென்ரியூ கவிதைக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

33. சிறுகதை வடிவத்தைக் கலை வடிவமாக்கிய ரஷ்ய எழுத்தாளர்கள் குறித்து எழுதுக.

34. தமிழின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான தி. ஜானகிராமன் சிறுகதை எழுதுவது குறித்துக் கூறும் விளக்கம் யாது ?

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

35. மாலையில் பணி முடித்த பட்டாசுத் தொழிலாளர்கள் தங்களைச் சுத்தம் செய்து கொள்ள, படும் துயரங்களை எழுதுக.

36. களம் – வரையறை செய்க.

37. புறப்பொருள் வெண்பாமாலை – குறிப்பு வரைக.

38. செயப்படுபொருளே எழுவாயாக வரும் என்பதைத் தொல்காப்பியம் வழி விளக்குக.

39. இந்தியப் பத்திரிகைகளுக்கு நேரு கூறிய அறிவுரை யாது ?

40. வேறுபடுத்துக : உலவி – தேடுபொறி.

பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

41. (அ) ஹைக்கூ, சென்ரியூ – வேறுபடுத்துக.

அல்லது

(ஆ) பேரானந்த நிலைகுறித்து ஆசியா உம்மா கூறும் வழிமுறைகளைத் தொகுத்தெழுதுக.

42. (அ) ''பாடாத தேனீ பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ'' என்ற பாரதிதாசனின் கவிதையோடு இறுக மூடிய கதவுகள் கதையின் கருப்பொருள் பொருந்தும் தன்மையை ஒப்பீடு செய்க.

அல்லது

(ஆ) ஒற்றைக் குரல் கதையில் வரும் பாணனின் இயல்புகளைக் கூறுக.

43. (அ) 'பேபிகுட்டி' கதையில் அமைந்துள்ள மொழி நடைமுறைக்குச் சான்று தந்து விளக்குக.

அல்லது

(ஆ) பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணிகள் குறித்து விளக்குக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

44. (அ) தொல்காப்பிய இயல்களின் வளர்ச்சியாகத் தோன்றிய பிற்கால இலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

அல்லது

(ஆ) தமிழில் அணியிலக்கணம் கூறும் முதல் நூல் தண்டியலங்காரம் மற்றும் யாப்பருங்கலக் காரிகை குறித்து விவரித்து எழுதுக.

45. (அ) வழுநிலை, வழாநிலை, வழுவமைதி ஆகியவற்றுக்கு நடைமுறை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

அல்லது

(ஆ) இதழ்களின் உருவாக்கம் குறித்து விவரிக்கவும்.

46. (அ) இதழ்களின் வகைகள் குறித்து விளக்குக.

அல்லது

(ஆ) மதுரைத் திட்டம், தமிழ் விக்கிபீடியா – வரையறுக்கவும்.

47. (அ) தமிழ்ச் சொற்செயலி – விவரிக்கவும்.

அல்லது

(ஆ) (i) வைரஸ் தாக்குதலும் பாதுகாப்பும் குறித்து விளக்குக.

(ii) ஒளி வழி எழுத்தறிவான் பற்றி குறிப்பு வரைக.

- o O o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online